கனிமொழி கருணாநிதி எம்.பி. உரை

8ஆம் பக்கத் தொடர்ச்சி

தொகுதி வரையறை பா.ஜ.க. பதறுவது ஏன்?

அதேபோல தொகுதி வரையறை பற்றி முதலமைச்சர் பேசினால், பி.ஜே.பி. பதறுகிறார்கள். இன்னும் நடக்கவே இல்லை அதைப் பற்றி பேசுகிறீர்களே என்று கேட்கிறார்கள். நடந்துவிட்டால் அதுபற்றி பேச முடியுமா? இவ்வளவு நாள் பேசாமல் ஏன் இருந்தீர்கள் என்று அப்போது கேட்பார்கள்.

ஆனால் தொகுதி மறுசீரமைப்பு நடைபெறும் என்பதை சமீபத்தில் பேசிய அமித் ஷா கூட மறுக்கவில்லை. அதற்கு முன்பே நாடாளுமன்றத்தில் தொகுதி சீரமைப்பு பற்றிய கேள்விக்கு, நடைபெறும் என்று தெளிவாக பதில் சொல்லியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல. பெண்கள் இட ஒதுக்கீடு மசோதா கொண்டு வரப்பட்ட போது, தொகுதி சீரமைப்புக்குப் பிறகு தான் இது நடைமுறைக்கு வரும் என்றும் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. எனவே தொகுதி சீரமைப்பு நடைபெறப் போகிறது. அது மக்கள் தொகை அடிப்படையில் நடைபெற்றால் நாங்கள் மிகப்பெரிய இழப்புக்கு ஆளாவோம் என்றுதான் அப்போதில் இருந்தே சொல்லி வருகிறோம்.

இப்போது 39 எம்.பி.க்கள் இருக்கிறோம், அது 31 ஆகும். அதன் பின் இன்னும் குறையும். நமக்கு மட்டுமல்ல கேரளா, ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்களுக்கும் இதே நிலைதான். ஆனால் தேர்தல் பிரச்சாரத்துக்கு கூட நம் மாநிலத்துக்கெல்லாம் வர மாட்டார்கள். நாம் சொல்லும் எதுவும் அவர்கள் காதில் ஏறாது.

தமிழ்நாட்டில் 39, புதுச்சேரி 1 என 40 எம்.பிக்கள் என இவர்களின் ஆதரவு இருந்தால்தான் நாம் ஆட்சி அமைக்க முடியும் என்ற நிலை இருந்தால் மட்டுமே, நாம் சொல்வதற்கு மரியாதை இருக்கும். அது இல்லவே இல்லை என்றால், நம் உரிமைகளை எப்படி கேட்க முடியும்? இவ்வளவு இருந்தே நம்மை மிரட்டிப் பார்க்கிறார்கள் என்றால், தொகுதிகள் குறைந்தால் நமது நிலை என்ன?

கல்வி மீது கவனம் செலுத்திய கலைஞர்!

மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதில் தமிழ்நாடு சிறப்பாக செயல்பட்டது. தலைவர் கலைஞர் காலத்தில் கல்வி மீது அதிக கவனம் செலுத்தினார். சுகாதாரத்தில் அதிக கவனம் செலுத்தினார். தமிழ்நாட்டின் ஹெல்த் இண்டிகேட்டர்ஸ் வளர்ந்த நாடுகளை விட அதிகமாக இருக்கிறது. அதனால்தான் மக்கள் தொகை கட்டுப்பாடாக உள்ளது. இது அரசாங்கம் மிகச் சிறப்பாக செயல்பட்டதால் உருவான ஒன்று.

ஆனால் நல்லா படித்தபையனை கிளாஸ் ரூமை விட்டு வெளியே நில் என்று சொல்வது மாதிரி. நாமே பாதிப்பது மாதிரி தொகுதி சீரமைப்பில் ஏதும் நடந்துவிடக் கூடாது என்றுதான் நாம் போராடுகிறோம்.

அமித்ஷா தெளிவுபடுத்தவில்லை!

ஆனால் அமித் ஷா என்ன சொன்னார்? உங்களுக்கு தொகுதிகள் குறையாது என்று சொன்னார். உபி, ராஜஸ்தான், பீகாருக்கு அதிகப்படுத்த மாட்டோம் என்று சொல்லவில்லை. தெளிவுபடுத்த வில்லை.

இதைத்தான் திராவிட நாயகன், தமிழ்நாடு முதலமைச்சர், தலைவர் கலைஞரின் மகன் அண்ணன் தளபதி கேள்வி கேட்கிறார். அவரது கேள்விக்கு நேர்மையாக பதில் சொல்லாமல் திசை திருப்புகிறார்கள்.

இந்த கேள்விகளுக்குப் பின்னால் இருக்கும் நேர்மையை நியாயத்தைப் புரிந்துகொள்ளுங்கள். இதைத்தான் தமது பிறந்தநாள் செய்தியாக முதலமைச்சர் விடுத்திருக்கிறார்.

முதலமைச்சர் தலைவர் அண்ணன் அவர்களின் பிறந்தநாள் உறுதி மொழியை நாம் எடுத்துக் கொள்வோம்.

'தமிழ்நாட்டின் நலன்களையும் எதிர்காலத்தையும் யாருக்காகவும், எதற்காகவும் விட்டுத் தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபடுவோம், தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும். இதுதான் ஒரே இலக்கு' இதுதான் நமது உறுதிமொழி இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. உரையாற்றினார்.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கப்பாண்டியன், சென்னை தென் மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., மகளிர் அணித் தலைவர் விஜயா தாயன்பன், மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ராணி, மகளிர் அணி இணைச் செயலாளர் குமரி விஜய குமார், மகளிர் தொண்டரணி இணைச் செயலாளர் தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., மாநில மகளிர் அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

விழுப்புரம், கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்ற விழுப்புரம் மத்திய மாவட்ட தி.மு.க. செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் முனைவர் க.பொன்முடி, விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் இரா. இலட்சுமணன் எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். உடன் இரா.ஜனகராஜ், செ.புஷ்பராஜ், இரா.சக்கரை மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

அமைச்சர் ஆர்.காந்தி இராணிப்பேட்டை நகராட்சி, வாரச்சந்தை மைதானத்தில் மாவட்ட நிர்வாகம், பள்ளி கல்வித் துறை மற்றும் பொது நூலக இயக்ககம் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 60க்கும் மேற்பட்ட புத்தக அரங்கங்கள் கொண்ட இராணிப்பேட்டை மாவட்ட 3வது மாபெரும் புத்தகத் திருவிழா 2025 னை தொடங்கி வைத்தார்கள். உடன் முனைவர்.ஜெ.யு. சந்திரகலா ஜெ.எல். ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., ந.சுரேஷ். பா.ஜெயசுதா திருமதி.சுஜாதா வினோத். ரமேஷ் கர்ணா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் வார்டு - கிளைகள் தோறும் நல உதவிகள்!

மாவட்டச் செயலாளர் கே.ஆர்.என்.ராஜேஸ்குமார் எம்.பி. அறிவிப்பு!

நாமக்கல், மார்ச் 2

நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க சார்பில் மார்ச் 01ஆம் தேதி கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளினை முன்னிட்டுமாபெரும் நலத்திட்ட உதவிகள் மற்றும் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்துவார்டு, கிளைகளிலும் கழக கொடியேற்றி இனிப்புகள் வழங்கி பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படஉள்ளது என நாமக்கல் கிழக்கு மாவட்ட செயலாளர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. அறிவித்துள்ளார்.

நாமக்கல் கிழக்கு நகரம்

தலைமை : செ.பூபதி, (நாமக்கல் கிழக்குநகரசெயலாளர்)

நேற்று (1.03.2025 - சனிக்கிழமை) காலை 09.00 மணி இராமாபுரம்புதூர் காலனி பொதுமக்களுக்குசர்க்கரை பொங்கல் மற்றும் உணவுவழங்குதல். நடராஜபுரம் அங்கன்வாடிமையம் காலை 09.30 மணி அங்கன்வாடிமை குழந்தைகளுக்கு இனிப்பும் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல். ன். கொசவம்பட்டி காலை 10.30 மணி அங்கன்வாடிமைய குழந்தைகளுக்கு இனிப்பும் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல். அன்னைஆதரவற்றோர் இல்லம் மாலை 07.00 மணி ஆதரவற்ற குழந்தைகளுக்கு இரவு உணவுவழங்குதல்.

நாமக்கல் மேற்குநகரம்

தலைமை : அ.சிவக்குமார், (நாமக்கல் மேற்குநகர செயலாளர்)

1.03.2025 வார்டு எண்19 (பொய்யேறிக்கரை) காலை 08.30 மணி கழக மூத்தமுன்னோடிகளுக்குஉணவும், இனிப்பும், வேஷ்டி, சேலைவழங்குதல். 6 வார்டு எண் 6 காலை 09.00 மணி கழககொடி யேற்றி பொதுமக்களுக்கு இனிப்பும்,உணவும் வழங்குதல். வார்டு எண்10 காலை 10.00 மணி ஆபுசுநகரில் கழக கொடியேற்றி, அங்குள்ள அங்கன்வாடி குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கி, விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல். வார்டுஎண்17, காலை 11.00 மணி கழக மூத்தமுன்னோடி களுக்குஉணவும், இனிப்பும், வேஷ்டி, சேலைவழங்குதல்.

நாமக்கல் சிவபாக்கியம் ஆதரவற்றமுதியோர் இல்லம் மதியம் 12.00 மணி முதியோர் இல்லத்தில் மதியஉணவுவழங்குதல். நாமக்கல் நகராட்சிஅலுவலகம் மாலை 04.00 மணி தூய்மை பணியாளர்களுக்கு மளிகை பொருட்கள் மற்றும் இனிப்புவழங்குதல். வார்டு எண்.7 மாலை 05.00 மணி கழககொடியேற்றி,கழக மூத்த முன்னோடி களுக்குஇனிப்புடன் உணவுவழங்கி, வேஷ்டி, சேலைவழங்குதல்.

நாமக்கல் தெற்குநகரம் -

தலைமை : இராணா ஆர். ஆனந்த், (நாமக்கல் தெற்கு நகரசெயலாளர்) நேரம் 01.03.2025 அம்மா உணவகம், பூங்காசாலை காலை,மதியம், இனிப்புடன் உணவுவழங்குதல். சிவபாக்கியம் முதியோர் இல்லம் காலை10.00 மணி முதியோர் இல்லத்தில் காலைஉணவுவழங்குதல். கோட்டைமெயின் ரோடு, கொண்டி செட்டிப்பட்டி காலை 10.30 மணி கல்வெட்டுடன் புதியகழககொடிஏற்றி இனிப்புவழங்குதல். அர்தனாரி பள்ளி,கணேசபுரம் காலை 11.00 பள்ளிமாணவ மாணவியர்களுக்கு நோட்டுபுத்தகம் வழங்குதல் மற்றும் அங்கன்வாடிமையகுழந்தைகளுக்குவிளையாட்டு உபகரணங்கள் வழங்குதல். மாற்றுதிறனாளிகள் இல்லம் காலை 12.00 மணி மாற்றுதிறனாளி இல்லம், லத்துவாடிமனவளர்ச்சிகுன்றியபள்ளியில் ஈர்காமதிய உணவு வழங்குதல்

இராசிபுரம் நகரம்!

தலைமை : என்.ஆர்.சங்கர், (இராசிபுரம் நகரசெயலாளர்)

1.03.2025 இராசிபுரம் புதியபேருந்துநிலையம் காலை 08.00 மணி பொதுமக்களுக்குஉணவுவழங்குதல். பழையபேருந்துநிலையம் காலை 10.00 மணி பொதுமக்களுக்குஉணவுவழங்குதல்.

இராசிபுரம் நகரம் காலை 10.30 மணி கழக மூத்த முன்னோடி களுக்கு பொற்கிழிவழங்குதல். அனைக்கும் கரங்கள் முதியோர் இல்லம் மதியம் மதிய உணவு வழங்குதல்.

நாமக்கல் ஒன்றியம்

தலைமை : வி.கே.பழனிவேல், (நாமக்கல் ஒன்றியசெயலாளர்),

01.03.2025 எர்ணாபுரம் ஊராட்சி காலை 10.00 மணி அரசுமருத்துவமனையில் உள் நோயாளிகளுக்கு பால்,பிரட் வழங்குதல். வீசாணம் ஊராட்சி காலை 10.30 மணி பள்ளிமாணவமாணவியர்களுக்குநோட்டுபுத்தகம் வழங்குதல். கோனூர் காலை 11.00 மணி ஆரம்பசுகாதாரநிலையத்தில் நோயாளிகளுக்குபால்,பிரட் வழங்குதல். 03.03.2025 மாரப்பநாயக்கன்பட்டிஊராட்சி நோட் காலை 10.00 மணி அரசுபள்ளிக்குதேவையானஉபகரங்கள் வழங்குதல் மற்றும் மாணவமாணவியர்களுக்குநோட்டுபுத்தகம் வழங்குதல்

மோகனூர் ஒன்றியம்

தலைமை : பெ.நவலடி, (மோகனூர் ஒன்றிய செயலாளர்),

1.03.2025 லத்துவாடி ஊராட்சி காலை 07.00 மணி நம்பிக்கை இல்லம் குழந்தைகளுக்குகாலைஉணவுமற்றும் ூபுத்கல்விஉபகரணங்கள் வழங்குதல். லத்துவாடிஊராட்சி காலை 08.30 மணி கழககொடி யேற்றி குழந்தைகளுக்கும், பொதுமக்களுக்கும் சர்க்கரை பொங்கல் மற்றும் பொற்கிழி வழங்குதல். அணியாபுரம் ஊராட்சி காலை 08.30மணி கழககொடியேற்றி, பொதுமக்களுக்கு இனிப்புவழங்கி, உணவுவழங்குதல்.

தோளூர் ஊராட்சி காலை 9.00 மணி கழக கொடியேற்றி, பொதுமக்களுக்கு இனிப்புவழங்கி,உணவுவழங்குதல்.

இராசிபாளையம் ஊராட்சி மாலை 5.00 மணி கழககொடியேற்றி, சர்க்கரைபொங்கல் மற்றும் கழக மூத்த நிர்வாகிகளுக்கு வேஷ்டிவழங்குதல்.

புதுச்சத்திரம் வடக்குஒன்றியம்

தலைமை : எம்.பி. கௌதம், (ஒன்றியசெயலாளர்)

01.03.2025 பாச்சல் ஊராட்சி காலை 08.00 மணி அண்ணாசிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, பொதுமக்களுக்கு இனிப்புவழங்குதல். திருமலை ஊராட்சி காலை 12.30 மணி தூய்மை பணியாளர்களுக்கு மதிய உணவு வழங்குதல். நவணி ஊராட்சி காலை 11.00 மணி கழக மூத்தமுன்னோடி களுக்குவேஷ்டி வழங்குதல்.

தாத்தையங்கார்பட்டி ஊராட்சி மதியம் 12.00 மணி கழக மூத்தமுன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்குதல். நவணி ஊராட்சி காலை 10.00 அங்கன்வாடி குழந்தைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல்.

புதுச்சத்திரம் தெற்குஒன்றியம்

தலைமை : சு.ஜெயபிரகாஷ், (ஒன்றிய பொறுப்பாளர்)

1.03.2025 ஏளூர் காலை 7.00 மணி பொதுமக்கள் மற்றும் ஏழைஎளியோர்களுக்குகாலைஉணவுவழங்குதல். தத்தாதிரிபுரம், மின்னாம்பள்ளி,தாளம்பாடி காலை 07.30 மணி கழக இருவண்ணக் கொடியேற்றி இனிப்பு வழங்கி,கழக மூத்த முன்னோடிகள் 4 நபர்களுக்குபொற்கிழி வழங்குதல்.

எஸ்.உடுப்பம், நவமங்கலம், கொசவம்பட்டி காலை 08.00 மணி பொதுமக்கள் மற்றும் ஏழைஎளியோர்களுக்குகாலை உணவு வழங்குதல். பாப்பி நாயக்கன்பட்டி, செல்லப்பம்பட்டி காலை 09.00 மணி கழக இருவண்ணக் கொடியேற்றி இனிப்புவழங்கி,கழக மூத்த முன்னோடிகள் 5 நபர்களுக்குபொற்கிழிவழங்குதல்.ளுக்

களங்காணி, செல்லியாயி பாளையம், காரைக்குறிச்சி காலை 09.30 மணி கழக இருவண்ணக் கொடியேற்றி இனிப்புவழங்கி, கழக மூத்த

முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்குதல்.

காரைக்குறிச்சி புதூர், கரடிப்பட்டி, கொளத்துப்பாளையம் காலை 10.00 மணி அரசுபள்ளி மாணவ மாணவியர்களுக்குநோட்டு புத்தகம் வழங்குதல்

சேந்தமங்கலம் ஒன்றியம்

தலைமை : அ.அசோக்குமார், (ஒன்றியசெயலாளர்),

1.03.2025 பள்ளிப்பட்டி, உத்திரகிடிகாவல் ஊராட்சி காலை 07.15 மணி கழக மூத்தமுன்னோடிகளைவேஷ்டி,சேலை வழங்கிகௌரவித்தல்.

பேளுக்குறிச்சி ஊராட்சி காலை 07.30 மணி அரசு ஆரம்பசுகாதார நிலைய உள்நோயளிகளுக்கு பால் மற்றும் பிரட் வழங்குதல். துத்திக்குளம், பெரியகுளம் ஊராட்சி காலை 08.30 மணி கழக மூத்த முன்னோடிகளை வேஷ்டி,சேலை வழங்கி கௌரவித்தல்.

சேந்தமங்கலம் ஊராட்சி காலை கிரிக்கெட் போட்டி நடத்துதல். அக்கியம்பட்டி, கொண்டமநாயக்கன்பட்டி ஊராட்சி காலை 09.15 கழக மூத்த முன்னோடிகளை வேஷ்டி, சேலைவழங்கி கௌரவித்தல்.

சேந்தமங்கலம், துத்திக்குளம் ஊராட்சி மதியம் 12.00 மணி ஆதவற்றமுதியோர் இல்லங்களில் மதியஉணவுவழங்குதல்.

எருமப்பட்டிஒன்றியம் -

தலைமை : பாலு (எ) P.பாலசுப்ரமணியம், (ஒன்றிய செயலாளர்,)

01.03.2025 ரெட்டிப்பட்டிஊராட்சி, சிந்துநகர், காலை 08 மணி முதியோர் இல்லத்திற்குகாலைஉணவுவழங்குதல்.கம் தக

போடிநாயக்கன்பட்டி ஊராட்சி காலை 9.00 மணி தூய்மை பணியாளர்களுக்கு சீருடை வழங்குதல். பாலப்பட்டி ஊராட்சி காலை 9.30 மணி தூய்மை பணியாளர்கள், ஊராட்சிநிர்வாகிகள், மூர்வு ஆப்ரேட்டர்களுக்கு சீருடை வழங்குதல்.

அலங்காநத்தம் ஊராட்சி காலை10.00மணி தூய்மை பணியாளர்களுக்கு சீருடை வழங்குதல்.

ரெட்டிப்பட்டி ஊராட்சி காலை 10.30 மணி மாவட்ட அளவிலான மாபெரும் கிரிக்கெட் போட்டி நடத்துதல்.

மேட்டுப்பட்டி ஊராட்சி காலை 11.00 மணி கழக நிர்வாகிகளுக்கு வேஷ்டி வழங்குதல்.

செவிந்திப்பட்டி ஊராட்சி காலை 11.30 மணி துவக்க பள்ளி மாணவியர்களுக்கு இலவச நோட்,புத்தகம் வழங்குதல். வாழவந்தி ஊராட்சி மதியம் 12.00 மணி துவக்க பள்ளிமாணவ, மாணவியர்களுக்கு இலவச நோட்,புத்தகம் வழங்குதல்.

வரதராஜபுரம் ஊராட்சி மதியம் 12.30 மணி கிறிஸ்துவ ஆலையத்தில் உள்ள ஆதரவற்ற மக்களுக்கு மதிய உணவு வழங்குதல். வரகூர் ஊராட்சி மதியம் 1.00 மணி தூய்மை பணியாளர்களுக்கும், ஊராட்சி நிர்வாகிகளுக்கும் சீருடை வழங்குதல்.

பொம்மசமுத்திரம் ஊராட்சி மதியம் 01.30 மணி துவக்கபள்ளி மாணவ, மாணவியர்களுக்கு நோட், பேனா வழங்குதல்.

கொல்லிமலை ஒன்றியம் -

தலைமை : எஸ்.செந்தில் முருகன், (ஒன்றிய செயலாளர்),

01.03.2025 ஆலத்தூர் நாடு காலை 07.30 மணி துப்புறவு பணியாளர்களுக்கு நலதிட்டங்கள் மற்றும் அங்கன்வாடி மையத்திற்கு படுக்கை விரிப்பு வழங்குதல். நத்துக்குழிப்பட்டி காலை 8.00 மணி பள்ளிமாணவ மாணவியர்களுக்கு நோட்டு, எழுதுபொருள் வழங்குதல். வளப்பூர்நாடு காலை 9.00மணி ஒலையாறு ஆதரவற்றகுழந்தைகள் மையத்திற்குஉணவு வழங்குதல். அறியூர்நாடு காலை 10.00 மணி பள்ளி குழந்தைகளுக்கு எழுதுபொருள் வழங்குதல். வாழவந்தி நாடு காலை 11.00 மணி ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள நோயாளிகளுக்கு உணவுபொருள் வழங்குதல். மற்றும் பெருமாப்பட்டியில் கைபந்துவிளையாட்டு போட்டிவைத்து, பரிசுவழங்குதல். எடப்புளி நாடு மதியம் 12.00 மணி ஆதரவற்ற முதியவர்களுக்கு உணவு வழங்குதல். பெரக்கரை நாடு மதியம் .02.00 மணி புதியகழககொடிகம்பம் அமைத்தல், இனிப்பு வழங்கி, அங்குள்ள அங்கன்வாடி மைய குழந்தைகளுக்கு விரிப்புகள் மற்றும் விளையாட்டு பொருட்கள் வழங்குதல்.

இராசிபுரம் ஒன்றியம் -

தலைமை : கே.பி.ஜெகநாதன், (ஒன்றியசெயலாளர்),

01.03.2025 குருக்கபுரம் ஊராட்சி காலை 08.00 மணி கொழிஞ்சிப்பட்டி அருந்ததியர் தெருவில் கழக கொடியேற்றிபள்ளிமாணவ மாணவியர்களுக்கு இனிப்புகள் வழங்குதல். சந்திரசேகரபுரம் ஊராட்சி காலை 08.00 மணி காட்டூர் ரோட்டில் உள்ளஅனைக்கும் கரங்கள் ஆதரவற்றோர் இல்லத்தில் 100 நபர்களுக்குகாலைசிற்றுண்டி வழங்குதல். காக்காவேரிஊராட்சி காலை 09.00 மணி வெங்காயபாளையம் கிளையில் விளையாட்டுபோட்டிகள் நடத்திபரிசுபொருட்கள் வழங்குதல். சிங்களாந்தபுரம் ஊராட்சி காலை 09.30 மணி கழககொடியேற்றி 1000 நபர்களுக்கு இனிப்புவழங்குதல். கனகபொம்மன்பட்டிஊராட்சி காலை 10.00 மணி புதியதாக அமைக்கப்பட்டுள்ள கழக கொடிகம்பத்தில் கழககொடி யேற்றி இனிப்பு வழங்குதல்.

வெண்ணந்தூர் ஒன்றியம் -

தலைமை : ஆர்.எம்.துரைசாமி, (ஒன்றியசெயலாளர்) ,

1.03.2025 மூலக்காடு காலை 09.00 அன்புமருத்துவமனைஅருகில் 50 அடி உயரபுதிய கொடிக்கம் பத்தில் கழக கொடியேற்றி 5 கழக மூத்தமுன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்குதல். பழந்தின்னிப்பட்டி காலை 10.00 மணி ஊராட்சி மன்ற அலுவலக தூய்மை பணி யாளர்களுக்கு நலத்திட்டஉதவிகள் வழங்குதல். மதியம்பட்டி காலை 10.30 புனிதமரியமக தலேனாள் முதியோர் இல்லத்தில் மளிகை பொருட்கள் வழங்குதல். அனந்தகவுண்டம்பாளையம் காலை 11.00 மணி அங்கன்வாடி மைய குழந்தைகளுக்கு இனிப்புகள் வழங்குதல். கல்லாங்குளம் காலை 11.30 மணி பள்ளிமாணவ மாணவியர்களுக்கு நோட்புக் வழங்குதல்.

நாமகிரிப்பேட்டைஒன்றியம்

தலைமை : கே.பி. இராமசாமி, (ஒன்றிய செயலாளர்)

1.03.2025 தொ. ஜேடர்பாளையம் ஊராட்சி காலை 09.00 மணி மாணவ மாணவியர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள் வழங்குதல். கார்கூடல் பட்டிஊராட்சி காலை 10.00 மணி இனிப்பு மற்றும் சர்க்கரைப் பொங்கல் வழங்கி பள்ளிமாணவ மாணவியர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள் வழங்குதல். ஆயில் பட்டிஊராட்சி காலை 10.30 மணி இனிப்பு வழங்கி, ஏழைகளுக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கும் உதவுதல். முள்ளுக்குறிச்சி ஊராட்சி காலை 11.00 மணி இனிப்பு வழங்கி கழக மூத்த முன்னோடிகளுக்கு வேட்டிகள் வழங்குதல மூலகுறிச்சிஊராட்சி காலை 11.30 மணி இனிப்பு வழங்கி,பள்ளிமாணவ மாணவியர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள், கழக மூத்தமுன்னோடிகளுக்கும், கிளைகழக செயலாளர்களுக்கு வேட்டிகள் வழங்குதல்.

மோகனூர் பேரூர்

செல்லவேல் (எ) சி.செல்லப்பன், (பேரூர் செயலாளர்)

1.03.2025 மோகனூர் பேரூர்காலை 09.00 மணி அண்ணாசிலைக்கு மாலை அணிவித்து, அன்னதானம் வழங்குதல். வார்டு 15 காலை 10.00 மணி அங்கன்வாடி மையகுழந்தைகளுக்கு விளையாட்டு பொருட்கள் வழங்குதல். மோகனூர் பேரூர் காலை 10.30 மணி கழக மூத்த முன்னோடிகளுக்கு வேஷ்டி வழங்குதல்.

சேந்தமங்கலம் பேரூர்

தலைமை : ந. தனபாலன், (பேரூர் செயலாளர்)

01.03.2025 - காலை 09.00 மணி முதியோர் இல்லத்தில் காலைஉணவுவழங்குதல். எருமப்பட்டிபேரூராட்சி காலை 09.10 மணி அரசுமருத்துவமனையில் உள் நோயாளிகளுக்கு மதிய உணவு வழங்குதல். வார்டு 15 காலை 10.30 மணி கிரிக்கெட் நிகழ்ச்சிகள் நடத்துதல். வார்டு 12,16 மதியம் 12.30 முதியோர் இல்லத்தில் மதிய உணவு மற்றும் மளிகை பொருட்கள் வழங்குதல்

எருமப்பட்டிபேரூர்

தலைமை : சி.பழனியாண்டி, (பேரூர் செயலாளர்),

01.03.2025 எருமப்பட்டி பேரூராட்சி காலை 10.00 மணி ஒன்றிய துவக்கப்பள்ளி மாணவ மாணவியர்களுக்கு இனிப்பு மற்றும் நோட்டு புத்தகங்கள் வழங்குதல். எருமப்பட்டி பேரூராட்சி காலை 11.00 மணி அங்கன்வாடி குழந்தைகளுக்கு இனிப்பு மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல். எருமப்பட்டி பேரூராட்சி மதியம் 12.00 மணி தூய்மை பணியாளர்களுக்கு இனிப்பு மற்றும் மதிய உணவு வழங்குதல்.

காளப்பநாயக்கன்பட்டிபேரூர்

தலைமை டி.என்.முருகேசன்; (பேரூர் செயலாளர்).

01.03.2025 துத்திக்குளம் காலை 08.00 மணி ஆதரவற்றமாணவர் இல்லத்தில் உணவுவழங்குதல். காளப்பநாயக்கன்பட்டிபேரூராட்சி காலை 10.00 மணி ஒன்றிய துவக்கப் பள்ளி மாணவர்களுக்கு நோட்டு, பேனாவழங்குதல். காளப்பநாயக்கன் பட்டி பேரூராட்சி மதியம் 12.00 மணி தூய்மைபணி யா ளர்களுக்கு உணவு வழங்குதல்.

சீராப்பள்ளிபேரூர் -

தலைமை : ந.செல்வராஜ், (பேரூர் செயலாளர்),

01.03.2025 சீராப்பள்ளி பேரூர் காலை 10.00 மணி பள்ளிமாணவ மாணவியர்களுக்கு ங்குஇனிப்பு வழங்கி, பேனா, நோட்டுவழங்குதல். சீராப்பள்ளி பேரூர் காலை 11.00 மணி அங்கன்வாடிமையகுழந்தைகளுக்கு இனிப்பு,வழங்கி விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல். சீராப்பள்ளிபேரூர் காலை 11.30 மணி கழக மூத்தமுன்னோடிகளுக்குவேஷ்டி வழங்கி கௌரவித்தல்.

நாமகிரிப்பேட்டைபேரூர் -

தலைமை : கு.அன்பழகன், (பேரூர் செயலாளர்), 01.03.2025 சரோன் முதியோர் இல்லம் சரோன் முதியோர் இல்லத்தில் காலை,மதியம், இரவுசாப்பாடு வழங்குதல். அரியாக்கவுண்டம் பட்டி, தண்ணீர் பந்தல்காடு காலை 10.00 மணி அரசு துவக்கப்பள்ளிமாணவ மாணவியர்களுக்கு இனிப்புவழங்கி, பேனா,நோட்டுவழங்குதல். எருமப்பட்டி அண்ணா வெள்ளி வாரச்சந்தை காலை 09.30 மணி சமுதாயக் கூடத்தில் மாபெரும் இரத்தான முகாம் நடத்துதல்.

வெண்ணந்தூர் பேரூர் -

தலைமை : ஆர்.எஸ்.எஸ். இராஜேஸ், (பேரூர் செயலாளர்).

1.03.2025 வெண்ணந்தூர் அரசுமருத்துவமனை காலை 09.30 மணி உள்நோயாளிகளுக்குபால் மற்றும் பிரட் வழங்குதல். வெண்ணந்தூர் பேரூர் கழக அலுவலகம் காலை 10.00 மணி பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்குதல். வெண்ணந்தூர் பேரூர் கழக அலுவலகம் காலை10.30 மணி கழக மூத்தமுன்னோடிகளுக்குபொற்கிழி வழங்குதல்.

அத்தனூர் பேரூர் -

தலைமை : க.கண்ணன், (பேரூர் செயலாளர்,)

01.03.2025 வார்டு 7, 9, 10 காலை 10.00 மணி 75 நபர்களுக்கு இனிப்புமற்றும் அன்னதானம் வழங்கப்படுகிறது வார்டு எண் 12 காலை 11.00 மணி 25 நபர்களுக்குகழக மூத்தமுன்னோடிகளுக்குவேஷ்டி ணவிவழங்குதல். அரசு ஆரம்பசு காதார நிலையம் காலை 11.00 மணி சுகாதாரநிலையத்தில் பால், பிரட் வழங்குதல். அரசு பள்ளி காலை 11.30 மணி பள்ளிமாணவமாணவியர்களுக்குநோட்டுமற்றும் கரபேனாவழங்குதல்.

இரா. புதுப்பட்டிபேரூர் -

தலைமை : பெ.ஜெயக்குமார், (பேரூர் செயலாளர்).

03.03.2025 இரா. புதுப்பட்டிபேரூர் காலை 10.00 மணி கழக மூத்தமுன்னோடி நிர்வாகிகளுக்கு கழக வேஸ்டி வழங்கி கௌரவித்தல். ஆர்.பி.காட்டூர் காலை 10.30 மணி பள்ளி மாணவ மாணவியர்களுக்கு நோட்டு, புத்தகங்கள் மற்றும் உணவுவழங்குதல். இரா. புதுப்பட்டிபேரூர் மதியம் 01.00 மணி தூய்மை பணியாளர்களுக்கு மதிய உணவு வழங்குதல்.

பட்டணம் பேரூர் தலைமை : பொ.நல்லதம்பி, (பேரூர் செயலாளர்)

01.03.2025 பட்டணம் பேரூர்,அரசுபள்ளி காலை 9 மணி பள்ளி மாணவ மாணவியர்களுக்குநோட்டு, புத்தகங்கள் வழங்குதல். பட்டணம் பேரூராட்சி காலை 10 மணி பேரூராட்சிபகுதிகளில்மரம் கன்றுநடுதல். போதமலைஅடிவாரம் மதியம் 12.00 மணி ஆதர வற்றோர் மற்றும் முதியோர் இல்லத்தில் உணவுவழங்குதல்.

பிள்ளாநல்லூர் பேரூர்

தலைமை : அ. சுப்ரமணியம், (பேரூர் செயலாளர்),

1.03.2025 பிள்ளாநல்லூர் பேரூர் காலை 09.00 மணி 250 நபர்களுக்குகாலைஉணவுவழங்குதல். பிள்ளாநல்லூர் பேரூர் காலை 10.00 மணி 75 நபர்களுக்கு கழக மூத்தமுன்னோடிகளுக்குவேஷ்டி வழங்குதல் பிள்ளாநல்லூர் பேரூர் காலை 11.00 மணி கழக உறுப்பினர்களுக்கு மருத்துவ உதவி வழங்குதல். பிள்ளாநல்லூர் பேரூர் காலை11.30 மணி பள்ளி மாணவ மாணவியர்களுக்குபேனா, நோட், பென்சில் வழங்குதல்.

இவ்வாறு கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி. அறிவித்துள்ளார்.